முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம்,வடமாகாணம்
**Provincial Department of Education. Northern Province**

42 T I,II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) நிலையறிபரீட்சை,2021
**General Certificate of Education (Ord. Level)**

கர்நாடகசங்கீதம்I, II
**Carnatic Music I, II**

மூன்றுமணித்தியாலம்
**Three Hours**

கவனிக்க வேண்டியவை

i. எல்லா வினாக்களுக்கும் விடைஎழுதுக.
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிக.

## பகுதி–I

1. பண்டையகாலத்தில் இராக கதம்பம் என அழைக்கப்படும் உருப்படி
   1. ஜதீஸ்வரம் 2. இராகமாலிகை 3. கிருதி 4. வர்ணம்

2. பல இசைக்கருவிகள் ஒன்று சேர்ந்து இசைக்கப்படும் இசை நிகழ்ச்சி
   1. வில்லுப்பாட்டு 2. இசைநாடகம் 3. பல்லியம் 4. கதாபிரசங்கம்

3. ஹிந்துஸ்தானி இசையில் “கமாஜ் தாட்”என அழைக்கப்படும் இராகம்
   1. ஹரிகாம்போஜி 2. பந்துராளி 3. கல்யாணி 4. தோடி

4. “சின்னஞ் சிறுகிளியே” இராக மாலிகையில் திலங் இராகத்தில் பாடப்படும் சாகித்தியப் பகுதி
   1. உன் கண்ணில்........... 2. உச்சிதனை...........
   3. ஓடிவருகையிலே........... 4. கன்னத்தில் முத்தமிட்டால்...........

5. சதுஸ்ரஜாதி துரவ தாளத்தின் அங்க அடையாளங்கள்
   1. $|_3\ 0\ |_3\ |_3$ 2. $|_7\ 0\ |_7\ |_7$ 3. $|_4\ 0\ |_4\ |_4$ 4. $|_5\ 0\ |_5\ |_5$

6. இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நிகழ்ச்சி
   1. நாட்டியநாடகம் 2. இசைநாடகம் 3. கூத்து 4. சமூகநாடகம்

7. பொதுவாகசாபு தாளம் என கூறப்படும் தாளவகை
   1. திஸ்ர சாபு 2. கண்டசாபு 3. மிஸ்ர சாபு 4. சங்கீர்ணசாபு



kalvi.lk

8. “குற்றாலக் குறவஞ்சி”என்ற இசை நாடகத்தை எழுதியவர்

1. திரிகூட இராசப்பக்கவிராயர்
2. அருணாசலச் கவிராயர்
3. கனம் கிருஷ்ணய்யர்
4. சுப்பராமஜயர்

9. 72 மேளகர்த்தாசக்கரத்தில் இரண்டு விவாதி ஸ்வரங்கள் எடுத்துக் கொள்ளும் மேளங்களின் எண்ணிக்கை யாது?

1. 31 , 36
2. 7 , 12
3. 61 , 66
4. 43 , 48

10. “மானினேர் விழி”என்ற தேவாரம் பாடப்படும் தாளம்

1. ஆதிதாளம்
2. கண்டசாபு
3. ரூபகம்
4. மிஸ்ர சாபு

11. வருடாவருடம் ஆராதனை செய்து போற்றப்படும் வாக்கேயகாரர்

1. கோபாலகிருஸ்ணபாரதியார்
2. புரந்தரதாஸர்
3. தியாகராஜசுவாமிகள
4. முத்துஸ்வாமிதீட்சிதர்

12. கடபயாதி ஸங்க்யைக்காககாமவர்த்தினி என அழைக்கப்படும் இராகம்

1. தோடி
2. கல்யாணி
3. சங்கராபரணம்
4. பந்துராளி

13. “மாயன் குழலிசையில்”என்றபதம் பாடப்படும் இராகத்திற்குரிய தாய் இராகத்தின் மேள எண்

1. 45
2. 60
3. 56
4. 65

14. ஆரபி இராகத்தின் ஆரொகண அவரோகணம்

1. ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ
2. ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ
3. ஸரிமபதஸ் ஸ்தபமரிஸ
4. ஸரிமபதஸ் ஸ்நிதபமகரிஸ

15. “பெருமாளே”என முடிவடையும் உருப்படிவகை

1. தேவாரம்
2. புராணம்
3. திருப்புகழ்
4. விருத்தம்

16. 72 மேளச் சக்கரத்தில் 5வது, 11வது சக்கரங்களில் காணப்படும் சங்கேதம்

1. ரி, கு
2. ரி,கி
3. ர,கி
4. ரு,கி

17. வெங்கடமஹி அவர்களால் “சதுர்த்தண்டிப்பிரகாசிசை”எனும் நூல் எழுதப்பட்ட காலப்பகுதி

1. 1550
2. 1665
3. 1635
4. 1575

18. “அள்ளியுண்டிடலாம்” இப்பாடலின் வகை

1. பதம்
2. கீர்த்தனை
3. இராகமாலிகை
4. வர்ணம்ஷ



kalvi.lk

19. சியாமாசாஸ்திரிகளால் அறிமுகம் செய்யப்பட்ட தாளவகை

1. சங்கீர்ணசாபு 2. கண்டசாபு 3. மிஸ்ர சாபு 4. விலோமசாபு

20. ஆதிதாள வர்ணம் இரண்டாம் காலம் பாடும் போது ஒரு ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் மொத்த அட்சரங்களின் எண்ணிக்கை

1. 32 2. 64 3. 8 4. 128

21. "ஸகமபதஸ் - ஸ்நிதபமகரிஸ" இவ் ஆரொகண அவரோகணத்தைக் கொண்டமைந்த இராகம்

1. காபி 2. வசந்தா 3. மாண்டு 4. திலங்

22. புத்துவாட்டிசோமு அவர்களால் வாசித்துப் பிரபல்யமான இசைக்கருவி

1. வயலின் 2. மிருதங்கம் 3. புல்லாங்குழல் 4. வீணை

23. இராகம் - பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கினை உண்டாக்கியவர்

1. பைடாலகுருமூர்த்திசாஸ்திரிகள் 2. பச்சமிரியம் ஆதியப்பையர்
3. கோவிந்தாச்சாரியார் 4. சியாமாசாஸ்திரி

24. ஹரிகாம்போஜி இராகத்தில் காணப்படும் இராகச்சாய ஸ்வரம்

1. த 2. ப 3. ம 4. நி

25. இசைநாடக நிகழ்ச்சியில் காணப்படும் முக்கியமான அம்சம்

1. இசை 2. இசைக்கருவிகள் 3. உடை 4. மேற்கூறியயாவும்

26. முதல் தட்டுக்கு ஒரு எண்ணிக்கையும் அடுத்ததட்டிற்கு இரண்டு எண்ணிக்கையும் கொண்ட தாளம்

1. திஸ்ர சாபு 2. ஆதிதாளம் 3. ரூபகம் 4. கண்டசாபு

27. ஸங்க்யசங்கேத அட்சரங்களில் ஒன்று

1. ரி 2. கு 3. பா 4. நி

28. மகுடஸ்வரம் அமைத்து பாடப்படும் உருப்படி

1. கீர்த்தனை 2. இராகமாலிகை 3. ஜதீஸ்வரம் 4. வர்ணம்

29. பல்லிய இசையில் காணப்படும் தந்தி வாத்தியங்கள்

1. வீணை,மிருதங்கம் 2. வயலின்,புல்லாங்குழல்
3. வீணை,புல்லாங்குழல் 4. வீணை,வயலின்



kalvi.lk

30. ஆரபி இராகத்தின் ஆரோகணத்தில் காணப்படும் வர்ஜ ஸ்வரங்கள்

1. ம,நி 2. க,நி 3. ரி,நி 4. த,நி

31. கன்னடமொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளைக் இயற்றியவர்

1. தியாகராஜசுவாமிகள் 2. முத்துஸ்வாமிதீட்சிதர்
3. சியாமாசாஸ்திரி 4. புரந்தரதாஸர்

32. வயலின் வாத்தியத்தின் மூன்றாவது தந்தி சுரதி சேர்க்கும்போது ஒலிக்கும் ஸ்வரம்

1. மத்தியஸ்தாயிமத்திமம் 2. மந்தரஸ்தாயிமத்திமம்
3. மந்தரஸ்தாயிபஞ்சமம் 4. மத்தியஸ்தாயிபஞ்சமம்

33. ஸ,ரி,கு,ம,ப,தி,நு - சங்கேதம் குறிக்கும் இராகம்

1. சங்கராபரணம் 2. ஹரிகாம்போஜி 3. கல்யாணி 4. பந்துவராளி

34. "பரிதானமிச்சிதே"எனும் பிலஹரி இராக உருப்படி அமைந்ததாளம்

1. ஆதிதாளம் 2. மிஸ்ர சாபு 3. கண்டசாபு 4. ரூபகம்

35. "திருவாலவாய்" இத்தலத்தில் பாடப்பட்ட தேவாரம்

1. பண்ணும் பதம் 2. மானினேர் விழி 3. பண்டுநால்வருக் 4. தாயினும் நல்ல

36. சங்கீர்ணசாபு தாளத்திற்குரிய ஜதிச் சொல்

1. தகதிமி 2. தகதிமிதகிட 3. தகிடதகதிமி 4. தகதிமிதகதகிட

37. தஞ்சாவூர் ஓர் இசைப்பீடமாக திகழக் காணமாக இருந்தவர்களில் ஒருவர்

1. புரந்தரதாஸர் 2. தியாகராஜசுவாமிகள்
3. அருணாசலகவிராயர் 4. முத்துத் தாண்டவர்

38. மாயாமாளவகௌளை இராகக் கிருதியின் சரணத்தில் இலட்சணகாரர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டுப் பாடியவர்

1. முத்துஸ்வாமிதீட்சிதர் 2. கோபாலகிருஸ்ணபாரதியார்
3. தியாகராஜசுவாமிகள் 4. புரந்தரதாஸர்

39. ஹரிகாம்போஜி இராகத்தைபண்டைத் தமிழிசையில் எவ்வாறு அழைப்பர்

1. சுத்தமேளம் 2. கமாஜ்தாட் 3. செம்பாலை 4. குறிஞ்சி

40. 72 மேளகர்த்தாசக்கரத்தில் 3வது 5வது சக்கரத்தின் பிரதிமத்திமசக்கரங்களின் பெயர்கள் முறையே



kalvi.lk

1. அக்னி,ருத்ர 2. பிரம்ம,பாண 3. பிரம்ம,ருத்ர 4. அக்னி,பாண

## பகுதி II

* **முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக**

01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. இசைநாடகக் கலைஞர்கள் இருவர் பெயர்களைத் தருக?
2. கர்நாடக இசைக்கச்சேரியில் வாசிக்கப்படும் உப தாளவாத்தியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக
3. திருத்தாண்டகம் பாட உகந்த இராகம் யாது?
4. குருகுலவாசமுறை வழக்கத்தில் வந்த காலப்பகுதி யாது?
5. உருப்படிகளில் சங்கதிபோடும் முறையினைமுதன் முதலில் நிர்ணயித்தவர் யார்?
6. நீர் கற்ற இராக மாலிகை அமைந்த தாளம் யாது?
7. சாபுதாளத்தின் மறு பெயர் யாது?
8. 16 ஸ்வரப் பெயர்களில் 10வது ஸ்வரப் பெயர் யாது?
9. சுருதிக்காக இரண்டுதம்புராக்கள் பயன்படுத்தப்படும் இசை வகை எது?
10. "உள்ளமெல்லாங் கலை" என அனுபல்லவியில் சாகித்தியம் அமைந்த, உருப்படி பாடப்படும் இராகம் யாது?

(2+2+1+1+1+1+1+1+1+1 =12 புள்ளிகள்)

02. ஹரிகாம்போஜி இராகத்தின் இலட்சணத்தை விரிவாகத் தருக
(உருப்படிகள்,சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)

(12 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டினைப்பற்றி விரிவான விளக்கம் தருக

1. சாபுதாளம்
2. 12 ஸ்வரங்களும் 16 பெயர்களும்
3. பல்லிய இசை

(6x2=12புள்ளிகள்)



kalvi.lk

04. 1. வயலின் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக (2 + 2புள்ளிகள்)

2. இவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக (4 புள்ளிகள்)

3. வயலின் வாத்தியத்தின் சிறப்பம்சங்கள் இரண்டினைத் தருக (2 புள்ளிகள்)

4. இவ் வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யம் பெற்ற இரு கலைஞர்கள் இருவர் பெயரைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

05. தியாகராஜ சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் இசைக்கு ஆற்றிய பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க

1. வாழ்க்கைகாலம் (1 புள்ளி)
2. பெற்றோர் பெயர் (1 புள்ளி)
3. இளமைக்கல்வி (2 புள்ளிகள்)
4. இவர் இசைக்காற்றிய தொண்டினை எழுதுக (6 புள்ளிகள்)
5. இவர் பாடியபாடல்கள் இரண்டு தருக (2 புள்ளிகள்)

06. 1. 72 மேளகர்த்தாசக்கரத்தில் நான்காவது சக்கரத்தின் பெயர் யாது? (2 புள்ளிகள்)

2. இச் சக்கரத்தின் பிரதிமத்திம சக்கரத்தின் பெயர் யாது? (2 புள்ளிகள்)

3. ருத்ரசக்கரத்தின் மேளஎண், இராகங்களின் பெயர், ஸ்வரஸ்தானங்களை அட்டவணைப்படுத்துக. (8 புள்ளிகள்)

07. இந்தியாவின் 17ஆம் 18ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி விளக்குக (12 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page